**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**
**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 22 ம் நாள்

**இ.ம.எண். 18/2026**

**in**

**அ.வ.எண். 79/2019**

1. சிதம்பரம்
2. பழனிசாமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. சண்முகம்
2. கணேசன்
3. பரமசிவம் .... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தின் முன்பாக 05.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.வேதாச்சலம், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/1 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.தங்கமணி, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்களை திறந்த நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலையாகாததால் தோன்றாத்தரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு பி.வா.சா.1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிடக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்:–**

i) அசல் வழக்கானது மனுதாரர்களால் எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்ததில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிலும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பிலும் சாட்சிகள் விசாரணை முடிவுற்று வாதுரைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் பி.வா.சா.1 சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது சில முக்கியமான கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டு போய்விட்டது. எனவே மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக பி.வா.சா.1 ஐ மீண்டும் ரீகால் செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாக உள்ளது. எனவே பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான பி.வா.சா.1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்பதே மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கமாகும்.

**2) 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:–**

i) மனுதாரர்கள் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. இவ்வெதிருரையில் இவ்வெதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளும்

சங்கதிகளைத் தவிர மற்றவைகளை மனுதாரர்களே கண்டிப்பாக நிரூபணம் வேண்டியது.

ii) தாவா சொத்தை பொறுத்து மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து சாட்சிகள் விசாரணை செய்து வாதுரைக்காக வாய்தா போடப்பட்டள்ளது. தற்போது மனுதாரர்கள்/வாதிகள் காலம் கடந்து பி.வா.சா.1 சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது சில முக்கியமான கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டு போய்விட்டது என்றும் மனுதாரர்கள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு கடந்த 07.01.2025 ம் தேதி பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றதை ரீகால் செய்ய வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார்.

iii) தற்போது மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு விசாரணையை தள்ளி போடுவதற்காகவும் காலம் தாழ்த்த வேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை அழைக்கழிக்க வேண்டியும் இடையூறு செய்யும் வகையிலும் தாவாவை தாக்கல் செய்துவிட்டு தற்போது காலம் கடத்த வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பிரிந்த பாகம் பொறுத்து மனுதாரர்கள்/வாதிகளுக்கோ, 2, 3 எதிர்மனுதாரர்கள்/2, 3 பிரதிவாதிகளுக்கோ எந்தவித பாகமும் சட்டப்படி சித்திப்பதில்லை. 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு பிரிந்த பாகத்தில் மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் 2, 3 எதிர்மனுதாரர்கள் எப்போதும் பொது சுவாதீனத்திலும் பொது அனுபவத்திலும் இருந்ததில்லை. மனுவில் முதல்நோக்கு இல்லை. எனவே இம்மனுவை

தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு எதிருரையின் சுருக்கமாகும்.

3. மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் தரப்பு கேட்கப்பட்டது. மனு, எதிருரை, இருதரப்பு வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா ? இல்லையா? என்பதாகும்.

**5. தீர்வு:–**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கில் பி.வா.சா.1 சாட்சியை மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும்போது சில முக்கியமான கேள்விகள் கேட்கப்படாமல் விடுபட்டு போய்விட்டது என்றும் பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான பி.வா.சா.1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு விசாரணையை தள்ளி போடுவதற்காகவும் காலம் தாழ்த்த வேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டியும் இடையூறு செய்யும் வகையிலும் தாவாவை தாக்கல் செய்துவிட்டு தற்போது காலம் கடத்த வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் எனவே இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

6. வழக்காவணங்களை பரிசீலிக்கும் போது அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீனம் பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் கடந்த 30.10.2019 அன்று 1ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 23.06.2022 அன்று அசல் வழக்கில் வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டு, பின்னிட்டு கடந்த 07.06.2024 அன்று அ.வ.எண்.79/2019 மற்றும் அ.வ.எண்.38/2020 ஆகிய இரு வழக்குகளிலும் தாவா சொத்துக்கள் ஒன்றாக இருப்பதால் இரு வழக்குகளையும் Joint Trial ஆக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டி மெமோ தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவிக்கப்பட்டதால் மேற்படி இரு வழக்குகளும் ஒன்றாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அ.வ.எண்.79/2019 வழக்கில் சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டுள்ளது.

7. வாதிகள் தரப்பில் கடந்த 24.06.2024 அன்று வா.சா.1 விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த 23.09.2024 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, கடந்த 04.11.2024 அன்று பி.வா.சா.1 விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.18 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, கடந்த 12.12.2024 அன்று பி.வா.சா.ஆ.2 விசாரிக்கப்பட்டு, கடந்த 07.01.2025 அன்று 1ம் பிரதிவாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதுரைக்காக அசல் வழக்கானது ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள்/வாதிகளால் கடந்த 03.03.2026 அன்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சியான

பி.வா.சா.1 சாட்சியை ரீகால் செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் மனுதாரர்கள்/வாதிகள் வழக்கு விசாரணையை தள்ளி போடுவதற்காகவும் காலம் தாழ்த்த வேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியை அலைக்கழிக்க வேண்டியும் இடையூறு செய்யும் வகையிலும் தாவாவை தாக்கல் செய்துவிட்டு தற்போது காலம் கடத்த வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொல்லப்பட்டிருந்தாலும் அசல் வழக்கானது தாவா சொத்தைப் பொறுத்து பாகப்பிரிவினை, தனி சுவாதீனம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள்/வாதிகளால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் தங்களது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய மனுதாரர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்குவது நீதியின் பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் சொல்லியுள்ள காரணங்கள் ஏற்கும்படியாக உள்ளதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமும் ஏற்பட போவதில்லை என்பதாலும் உபய தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனைகளை இறுதியாக தீர்க்கும் பொருட்டும் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் கருதினாலும், அசல் வழக்கானது வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 சாட்சியை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி பி.வா.சா.1 ஐ சாட்சியை ரீகால் செய்ய அனுமதிகோரி மிகவும் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் 1ம் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியம் மற்றும் கால

விரயத்தை கருத்திற்கொண்டு இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிப்பதே நீதியின்பால் சிறந்தது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து கீழ்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. மனுதாரர்கள்/வாதிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு ரூ.2,000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) செலவு தொகையாக வரும் 10.03.2026ம் தேதிக்குள் நேரடியாக வழங்கவேண்டும். தவறும் பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடி ஆகிவிடும்.

2. இரு தரப்பினரும் அசல் வழக்கை காலதாமதப்படுத்தாமல் விரைந்து முடிக்க ஒத்துழைக்க வேண்டும். மீண்டும் அழைக்க 10.03.2026.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 06ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.06 18:48:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** :- இல்லை

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.06 18:48:41 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.